**17.11.2025**

**CC 124/2022**

**PW.1. Rajeshkumar S/o.Krishnamoorthi**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

நான் தற்போது சூ கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். மேல்ஆலத்தூரில் இருந்து கொத்தகுப்பத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 3 கி.மீ இருக்கம். எதிரி கொத்தகுப்பத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் எதற்காக கொத்தகுப்பத்திற்கு சென்றேன் என்றால் எனது ஊரும் கொத்தகுப்பம் தான். நான் எனது முதல் விசாரணையில் மேல்ஆலத்தூரில் தான் வசித்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

ஆஜர் எதிரி ராம்கி எனது அக்கா மகன் ஆவார். சம்பவம் நடந்தபோது பொங்கல் சமயம் என்றால் சரிதான். எதிரி ராம்கி சீட்டு, பைனான்ஸ் நடத்தி வரும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரியிடம் நானும் 2021ல் இருந்து ரூ.50000 சீட்டு 2 கட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. 1 சீட்டு கட்டி வருகிறேன். நான் எதிரியிடம் 2 சீட்டு கட்டி வந்தேன் என்றாலும், வழக்கிற்காக ஒரு சீட்டு கட்டி வருகிறேன் என்று பொய்யாக சாட்சியளிகிறேன் என்றால் சரியல்ல. எதிரி சீட்டு நடத்தி முடிப்பதற்கு முன்பாகவே நான் அவரிடம் சீட்டு எடுத்துவிட்டேன் என்றால் சரிதான்.

நான் எதிரியிடம் சீட்டு எடுத்த பிறகு 30000ரூக்கான தகவணை கட்ட தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை அடித்ததால்தான் சீட்டு கட்டவில்லை. எதிரி என்னை அடித்ததால் மருத்துவமனையில் இருந்ததால் நான் சீட்டு கட்டவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான் கட்ட தவறிய ரூ. 30000ஐ கேட்டுதான் எதிரி என் வீட்டிடம் வந்தார் என்றால் சரியல்ல. எதிரி என் வீட்டிற்கு வந்தபோது பணம் கட்டமுடியாது என்று சொல்லி நான் அவரை ஆபாசமாக பேசி அனுப்பவிட்டேன என்றால் சரியல்ல.

எதிரி என் வீட்டிற்கு வந்தபோது பணம் கட்ட முடியாது என்று சொல்லிவிட்டு நானும், எனது அண்ணனும் சேர்ந்துதான் இரவு நேரத்தில் எதிரியை தாக்கினோம் என்றால் சரியல்ல. எதிரியை தாக்கும் போது நானும், எனது அண்ணனும் மதுபோதையில் இருந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியை தாக்கும்போது மதுபோதையில் தவறி விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

நாங்கள் எதிரியை தாக்கியதால் அவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. அவர் இருசக்கர வாகனத்திலேயே மருத்துவமனைக்கு சென்றார். அவருக்கு அடி எதுவும் படவில்லை. எதிரிக்கு அடிப்பட்டதால்தான் கழுத்து நரம்பு பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் சரியல்ல.

எங்களுக்கு காயம் ஏற்பட்டு சிகிச்சைகாக மருத்துவமனைக்கு சென்றபோது நாங்கள் மதுபோதையில் இருந்தததால் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. காயம் பெரியதாக இருந்ததால் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். சம்பவம் எதிரியின் வீட்டு அருகே நடந்தது என்றால் சரியல்ல. ரேசன் கடை அருகே நடந்தது. நாங்கள் எதிரியை தாக்கியதால் எதிரி குடியாத்தம் கிராமிய காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகாரின் குற்ற எண்.28/21 என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் STC 1371/2024 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் நானும், எனது அண்ணனும் எதிரிகள் என்றால் சரிதான்.

நான் எதிரிக்கு கட்ட வேண்டிய தொகையில் இருந்து தப்பிபதற்காக எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பணம் கொடுக்கமுடியாது என்று சொல்லி நானும், எனது அண்ணன் ஜெயகுமார் என்பவரும் எதிரியை தாக்கினோம் என்றால் சரியல்ல. எதிரி எங்களை தாக்கவில்லை என்றாலும், நாங்கள் மதுபோதையில் தவறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றாலும், எதிரிக்கும் இந்த வழகிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், சீட்டு பணம் கட்டாமல் இருப்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.124/2022

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | CHITRA |
| HUSBAND NAME | : | RAJESHKUMAR |
| VILLAGE | : | KOTHAKUPPAM |
| OCCUPATION | : | COOKING |
| AGE | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 17th day of November 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து அரசு பள்ளியில் தற்காலிக சத்துணவு சமையலராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். கடந்த 16.01.2024 அன்று இரவு 09.30 மணியளவில் எனது கணவர் மாடு கட்டிவிட்டு வருதாக சென்றபோது எனது மூத்தார் ஜெயக்குமார் என்பவரை ராம்கி என்பவர் அடித்தபோது ஜெயக்குமார் கத்திய சத்தம் கேட்டு எனது கணவர் சென்று பார்த்தபோது ராம்கி பீர் பாட்டிலால் எனது கணவரின் இடது பக்க கண்ணில் அடித்துவிட்டதாக அங்கு இருந்து பொதுமக்கள் வந்து சொன்னார்கள். நான் சென்று பார்த்தபோது எனது கணவருக்கு கண்ணில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்தது. அங்கிருந்து எனக்கு சின்னமாமியார் மகன் விக்னேஷ் என்பவர் எனது கணவரை அழைத்துகொண்டு குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு மருத்துவர் எனது கணவரை காயம் பெரிதாக இருப்பதாக சொல்லி வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அடுக்கம்பாறை மருத்துவமனையின் மருத்துவர் எனது கணவரை பரிசோதனை செய்தபோது அவரது கண்ணில் இருந்து சிறிது உடைந்த கண்ணாடி துண்டு இருப்பதாக சொன்னார். எனது கணவருக்கு கண்ணின் நரம்பு அறுந்துவிட்டதாகவும், சரியாக பார்வை தெரியாது என்றும் மருத்துவர் சொன்னார். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது கொத்தகுப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சம்பவ நடந்ததாக கேள்விபட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரி எனது கணவருக்கும், எனது மூத்தார் ஜெயக்குமார் என்பவருக்கும் அக்கா

மகன் என்றால் சரிதான். சம்வம் நேரடியாக பார்க்காததால் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் எதிரியிடம் ரூ.50000 சீட்டு கட்டினார் என்றால் சரிதான். அந்த சீட்டு தொகை ரூ.30000 நிலுவையில் இருந்ததை கேட்பதற்காக கேட்டபோதுதான் எனது கணவரும், ஜெயக்குமாரும் எதிரியை தாக்கினார்கள் என்றால் சரியல்ல.

எதிரியை தாக்கும்போது எனது கணவர் மதுபோதையில் நிலை தடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து நான் நீதிமன்றத்தல் ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தாக்கல் செய்துள்ள ஆவணம் என்னவென்றால் மருத்துவமனையில் மருத்துவர் கண்பார்வை தெரியாது என்ற அளித்த ஆவணத்தை காவல் நிலையத்தில் கொடுத்தேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது கணவரும், எனது மூத்தாரும் எதிரியை தாக்கியதில் அடிப்பட்டு எதிரியின் சிகிச்சைகாக 108 ஆம்புலன்ஸ் மூலம் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரியல்ல. எதிரி எனது கணவர் மீதும், எனது மூத்தார் மீதும் குடீயாத்தம் கிராமிய காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகாரின் குற்ற எண்.28/21 என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் STC 1371/2024 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் எனது கணவரும், எனது மூத்தாரும் எதிரிகள் என்றால் சரிதான்.

எதிரி எனது கணவரையும், எனது மூத்தாரையும் தாக்கவில்லை என்றாலும், அவர்கள் மதுபோதையில் தவறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றாலும், எதிரிக்கும் இந்த வழகிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், சீட்டு பணம் கட்டாமல் இருப்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.